# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடமாகாணம்
## பயிற்சிப் பரீட்சை - மார்ச் 2018

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்.

## வினாத்தாள் - I

**3**

45 நிமிடம்

சுட்டெண் ..................................................

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்.


* உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.
* மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும், உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே தருக.
* 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் கீழே தரப்பட்டுள்ள மூன்று விடைகளிருந்து சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.


## விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்


| பக்க இலக்கம் | பெற்ற சரியான வினாக்களின் எண்ணிக்கை |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| மொத்தம் | |
| இறுதிப்புள்ளிகள் | |
| $\square \times 2\frac{1}{2} = \square$ புள்ளிகள் | |
| எழுத்தில் | |


| | பெயரும் ஒப்பமும் |
|---|---|
| முதலாவது பரீட்சகர் (வகுப்பாசிரியர்) புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன் | ........................ பெயர் ........................ ஒப்பம் |
| இரண்டாவது பரீட்சகர் (........................) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்து கின்றேன். | ........................ பெயர் |
| மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | ........................ பெயர் ........................ ஒப்பம் |
| அதிபர் மேற்பார்வை செய்தேன். | |
| வலய / மாகாண மேற்பார்வையாளர் | |


- **1, 2 ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்ட உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.**


01. 


1) 


2) 

3) 

02. 

1) 

2) 



- **குறைந்த தொடர்புடைய உருச்சோடி இருக்கும் உருவைத் தெரிவு செய்க.**

03.



1)



2)



3)

04.



1)



2)



3)

- **5, 6 ஆகிய வினாக்களில் தரப்பட்ட மூன்றை ஒரு கூட்டமாகவும், இரண்டை வேறொரு கூட்டமாகவும் வேறுபடுத்தலாம். அவ்விரு கூட்டங்களையும் சேராதது**

05. ஆடு, நாய், கோழி, பூனை, தாரா, சிங்கம்
1) சிங்கம் 2) தாரா 3) ஆடு

06. ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே, ஜூன்
1) ஏப்ரல் 2) ஜூன் 3) பெப்ரவரி

- **வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

07. விளையாட்டில் ............................ பெற்ற கண்ணன் ....................................... அடைந்தான்.
1) தோல்வி - மகிழ்ச்சி 2) வெற்றி - மகிழ்ச்சி 3) களைப்பு - துன்பம்

- **கீழே தரப்பட்டுள்ள எண்களில் ஒரு கோலம் உண்டாவதற்கு நீக்கப்பட வேண்டிய எண்கள் யாவை?**

08. 6, 8, 9, 10, 12, 14
1) 6 2) 9 3) 12

09. 45, 42, 40, 35, 32, 30, 25
1) 25 உம் 32 உம் 2) 45 உம், 42 உம் 3) 42 உம், 32 உம்

- **10, 11 ஆகிய வினாக்களில் ■ = 3, △ = 1, ✡ = 4, □ = 5, ● = 2 என இட்டு வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

10.
● △
\+ △ ✡
..................

1) ■ □ 2) □ ■ 3) ✡ ●

11.
■ □
− △ ■
..................

1) ● ● 2) ✡ ■ 3) △ □

- **சரியான விடையைத் தெரிவு செய்க.**

12. குமாரின் தந்தையின் தந்தைக்கும் குமாரின் தம்பிக்குமிடையே உள்ள உறவு முறை யாது?
1) மாமாவும் மருமகனும்.
2) பாட்டனும் பேரனும்
3) சிறிய தகப்பனும் மகனும்

13. நூல், பனுவல், புத்தகம், புனல் என்பவற்றில் பொருந்தாத சொல்லைத் தெரிவு செய்க.
1) புனல் 2) நூல் 3) பனுவல்

14. "முப்பத்தையாயிரத்து எழுநூற்று நாற்பத்திரண்டு" என்னும் எண்ணில் உள்ள இலக்கங்களைப் பின்னாலிருந்து முன்னால் எழுதும் போது கிடைக்கும் எண் யாது?
1) 35742 2) 24753 3) 24735

15. ஒரு கடிகாரத்தில் மணித்தியால முள்ளும் நிமிட முள்ளும் செங்கோணத்தில் இருக்கும் இரு சந்தர்ப்பங்களும் யாது?
1) 4.00 உம் 6.00 2) 12.15 உம் 6.15 உம் 3) 3.00 உம் 9.00 உம்

- **பாடலை வாசித்து 16, 17, 18 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

**"சிறுவர் விரும்பும் குடைகள்**
**சின்னஞ் சிறிய குடைகள்**
**பெரியோர் விரும்பும் குடைகள்**
**பெறுமதி மிக்க குடைகள்."**

16. இப் பாடல் எதைப் பற்றிக் கூறுகின்றது
1) குடை 2) சிறுவர் 3) அழகு


17. "பெறுமதி" என குறிப்பிடப்படுவது?
1) செல்வாக்கு 2) அழகு 3) பயன்

- **சரியான விடைகளைத் தெரிவு செய்க.**

18. கண்ணன் நிமலனிலும் உயரம் குறைந்தவன், கமல் கண்ணனிலும் உயரம் குறைந்தவன். இதற்கேற்ப சரியான கூற்று
   1) நிமலனிலும் கமல் உயரம் கூடியவன்.
   2) கண்ணன், நிமலன், கமல் மூவரிலும் யார் உயரம் கூடியவர் என கூறுவது கடினம் .
   3) கண்ணன், கமல் இருவரிலும் பார்க்க நிமலன் உயரம் கூடியவன்.


19. பாடசாலைப் பிள்ளைகளின் கலைவிழா ஒரு வெள்ளிக்கிழமை ஆரம்பித்து மூன்று நாட்கள் நடைபெற்றதெனின் முடிவடைந்த நாள் யாது?
   1) சனிக்கிழமை 2) ஞாயிற்றுக்கிழமை 3) திங்கட்கிழமை

20. பின்வரும் உருவில் அட்டைத்தாளினால் செய்யப்பட்ட ஒரு பெட்டி உள்ளது. அது விரிக்கப் படும் போது தோன்றும் விதம் யாது?





1) 2) 3)

21. இவ் உருவை மடித்து ஒரு பெட்டியை செய்யும் போது அது தோன்றும் விதம் யாது?



1) 2) 3)

22. 1 தொடக்கம் 10 வரை எண்களை எழுதும் போது எழுதப்படும் இரட்டை எண்கள் எத்தனை?
   1) 10 2) 06 3) 05


23. 

இவ்வுருவில் நிழற்றப்படாத பகுதியை பின்னத்தில் தருக.

1) $\frac{1}{4}$ 2) $\frac{4}{8}$ 3) $\frac{3}{4}$

24. வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.
   கப்பல் : மாலுமி எனின், பேருந்து : ......................................
   1) சாரதி 2) நடத்துநர் 3) விமானி

25. ஓர் ஆடியில் மாற்றமின்றி விம்பமாகக் காட்சி தரும் எழுத்துக்கள்
   1) **ZL** 2) **AT** 3) **PS**

26. 


இவ் உருவிலுள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை

1) 10 2) 13 3) 11

27. சரியான கோவையைத் தெரிவு செய்க.

1) 6 x 8 + 8 = 58 2) 7 x 7 x 2 = 99 3) 66 – 33 + 10 = 43

28. பின்வரும் உருக்களில் உள்ள எண்கோலத்திற்கேற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண் களைத் தெரிவு செய்க.




1) 81 2) 54 3) 39

29. வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

வள்ளம் : நீர் எனின், சைக்கிள் : ................................


1) தரை 2) கடல் 3) ரயர்

30. இரு பகுதியும் சமனாக இருக்கும் நிரையைத் தெரிவு செய்க.

1) A E I O U = A I E O U

2) C D E F I = C D E I F

3) M N O P Q = M N O P Q

31. 


இவ்வுருவுடன் தொடர்புடைய சரியான கூற்றைத் தெரிவு செய்க.

1) பகுதி A ஆனது பச்சை, மஞ்சள், நீலம் ஆகிய மூன்று நிறங்களுக்கும் உரித்தானதல்ல.

2) பகுதி B, C, D ஆனது நீலம், பச்சை, மஞ்சள் ஆகிய மூன்று நிறங்களுக்கும் பொதுவானது.

3) பகுதி A ஆனது பச்சை, மஞ்சள், நீலம் ஆகிய மூன்று நிறங்களுக்கும் உரியது.

32. மூன்று மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை ஒலிக்கின்ற ஒரு கடிகாரம் முதலில் முற்பகல் 5.00 இற்கு ஒலித்தது. அது அடுத்ததாக ஒலிக்கும் இரு சந்தர்ப்பங்களைத் தரும் நேரங்கள்.

1) மு. ப 8.00 உம் மு. ப. 11.00 உம்

2) மு. ப. 9.00 உம் பி.ப 1.00 உம்

3) மு. ப 8.00 உம் பி.ப 10.00 உம்

33. கண்ணனிடம் ஐந்து ரூபாய் நாணயங்களாகவும்˙ இரண்டு ரூபாய் நாணயங்களாகவும் ரூ. 28 உள்ளது. அதில் இருக்கத்தக்க ஐந்து ரூபாய் நாணயங்களில் எண்ணிக்கை யாது?

1) 5 2) 4 3) 6

34. ஒரு ஆண்டில் அடுத்தடுத்து 31 நாட்களைக் கொண்ட மாதங்கள்

1) ஏப்ரல், மே 2) யூன், யூலை 3) யூலை, ஓகஸ்ட்

- **ஒரு நிரையில் ரமேஸ் தொடக்கத்திலிருந்து 11 ஆவதாக நிற்கின்றான். அவன் கடைசியிலிருந்து 9 ஆவதாக நிற்கின்றான். இதற்கேற்ப**

35. நிரையில் எத்தனை நபர்கள் நிற்கின்றனர்?

1) 19 2) 18 3) 20

36. அந்நிரையில் சுரேஸ் 7 ஆவதாக நின்றால் அவனுக்குப் பின்னால் எத்தனை பேர் நிற்கின்றனர்?

1) 13 2) 12 3) 11

37. நாம் பத்திரிகைகளை வாசிப்பதன் பிரதான காரணம்

1) செய்திகளை அறிவதற்காக

2) பொழுது போக்கிற்காக

3) வாசிப்பு பழக்கத்தை வளர்ப்பதற்காக


38. ஒரு வாகனம் ஒரு லீற்றர் பெற்றோலில் 20km தூரம் செல்கின்றது. 10 லீற்றர் பெற்றோலை நிரப்பிக்கொண்டு பயணத்தை ஆரம்பித்த வாகனம் 120 கிலோ மீற்றர் சென்றது. எஞ்சியிருக்கும் பெற்றோலின் அளவு யாது?

1) 4 லீற்றர் 2) 5 லீற்றர் 3) 8 லீற்றர்

39. என்னிடம் ஊதா, கறுப்பு, பச்சை, நிறப் பென்சில்கள் உண்டு. எனது நண்பன் நாதனிடம் நீலம், பச்சை, ஊதா நிறப் பென்சில்கள் உண்டு. நாதனின் தம்பியிடம் சிவப்பு. பச்சை, ஊதா நிறப் பென்சில்கள் உண்டு. நானோ எனது நண்பன் நாதனோ வைத்திருக்காத எந்த நிறப் பென்சில் நாதனின் தம்பியிடம் உண்டு?

1) கறுப்பு 2) பச்சை 3) சிவப்பு

40. பின்வரும் இரு திண்மங்கள் தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுக்களில் சரியானதைத் தெரிவு செய்க.



1) விளிம்புகளின் எண்ணிக்கை உச்சிகளின் எண்ணிக்கையிலும் குறைவானது.

2) உச்சிகளின் எண்ணிக்கை முகங்களின் எண்ணிக்கையிலும் குறைவானது.

3) முகங்களின் எண்ணிக்கை விளிம்புகளின் எண்ணிக்கையிலும் குறைவானது.

# மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்
# பயிற்சிப் பரீட்சை 03 இன் விடைகள்

தரம் – 05 3 வினாத்தாள் – I

| | | | |
|---|---|---|---|
| 1. | 1 | 21. | 3 |
| 2. | 3 | 22. | 3 |
| 3. | 2 | 23. | 3 |
| 4. | 3 | 24. | 1 |
| 5. | 1 | 25. | 2 |
| 6. | 3 | 26. | 3 |
| 7. | 2 | 27. | 3 |
| 8. | 2 | 28. | 3 |
| 9. | 3 | 29. | 1 |
| 10. | 1 | 30. | 3 |
| 11. | 1 | 31. | 3 |
| 12. | 2 | 32. | 1 |
| 13. | 1 | 33. | 2 |
| 14. | 2 | 34. | 3 |
| 15. | 3 | 35. | 1 |
| 16. | 1 | 36. | 2 |
| 17. | 3 | 37. | 1 |
| 18. | 3 | 38. | 1 |
| 19. | 2 | 39. | 3 |
| 20. | 1 | 40. | 3 |